உ

கடவுள் துணை

# செந்தமிழ்

தொகுதி-௫௦.] ஜய௵—வைகாசி௴ [பகுதி-௭.

Vol. 50, May— June 1954. No. 7.

## சிந்தாமணி விளக்கம்: சீவகன்பெயர்

திரு. நா. அப்பணையங்கார், தலைமையாசிரியர், தமிழ்ச்சங்கக்கலாசாலை.

(136-ம் பக்கத் தொடர்ச்சி)

இனி, காந்தருவதத்தையின் கதையால், சீவகன் பெயர் விளக்கமுறுதல் சிறிது விரிவாகச் சிந்திக்க உரியது. அவன் உயரிய வாழ்வினை அஃது உருவாக்குவதாம். திருமகள்போலச் சிறந்த அவள், அவனுக்கு வாழ்க்கைத்துணையாக வாய்த்த வரலாறு மிகவும் அற்புதமுடைத்து. விஞ்சையர்மகளை மானிடன் மணப்பது அரியவற்று ளெல்லாம் அரியதே யன்றோ? இதனால் அவன் புகழ் நிலவெல்லைக்கும் அப்பால் நீளத்தொடங்கிற்று.

சிந்தாமணியின் சிறப்புக்கூறவந்த திருத்தக்கதேவர் நூன்முகமாகிய பதிகத்தில்,

வானேற நீண்ட புகழான் சரிதம் (6)

என இதனை வாயார வழங்கினர். இங்குப் புகழான் என்றது சீவகனை. அவன் புகழ் வானேற நீண்டதென்றது, மண்ணிடத்தன்றி விண்ணிடத்தும் அது விரிந்து பரந்தமை விளக்கி நின்றது.

இராமாவதார காவியத்தில் கோசலாதேவியின் சிறப்புக்குறிக்க வந்த கவியரசர்,

... ... ... வானோர்
கேள்விச் செல்வம் துய்க்க வயிற்றோர் கிளைதந்தாள் (அயோத். தைல. 69.)

என்று கூறினர். கதாநாயகனை இராமபிரானுடைய புகழ்க் குணங்களைச் செவிச்செல்வமாக நுகர்ந்து, தேவரும் இன்புற்றனர் என்று

கருத்து. [கேள்விச் செல்வம்-இராமன் புகழாகிய செவிச்செல்வம்; துய்க்க-நுகர்ந்து இன்புற; கிளை-மைந்தன்.]

... ... வான்மீகி யென்பான்
தீங்கவி செவிகளாரத் தேவரும் பருகச் செய்தான் (பால. காட்டு. 1.)

என்றதும் இக் கருத்தே பற்றி வந்தது.

இதுபோலவே சிந்தாமணிப் புலவரும் சீவகன் குணங்களைக் கேட்டு இயக்கர் தலைவன் சுதஞ்சணன் இன்புற்றிருந்ததை, குணமாலையாரிலம்பகத்துக் கூறியுள்ளார்.

... ... சீவகன் குணங்கள் தம்மை
யாழெழீஇப் பாடக் கேட்டோர் அரம்பையைச் சேர்ந்திருந்தான் (1155)

என்றது காணலாம். இவ்வாறு சீவகன் புகழ்கள் வானகமளவும் நீண்டு வளர்ந்ததற்கு முதல் அடிப்படையாவது காந்தருவதத்தையாரிலம்பக மென்று கருதத்தக்கது.

காந்தருவதத்தை கலுழவேகனென்னும் வெள்ளிமலையின் விச்சாதார வேந்தன் மகள். அவளுக்கு மணவாழ்க்கையின் நல்வினைப் பயன் மண்ணிடத்து இராசமாபுரத்தே வந்து கூடுமெனச் சோதிடவர் சாதகஞ் செய்தனர். அதற்கு உரியவகையினை ஆராய்ந்த தந்தை, நிறைந்த செல்வத்துடன் அவளை அவ்வூர் வணிகர் பெருமகன் ஸ்ரீதத்தனிடம் சேர்ப்பித்தனன். 'இசைக் கலையில் இவளை வெல்வான் யாவனோ, அவனுக்கு இவளை மணம் புரிக' என்பது அவன் இட்ட கட்டளை.

அவ்வாறே ஸ்ரீதத்தனும், இராசமாபுரத்து அரசன் கட்டியங்காரன் உடன்பாடுபெற்று, அவளுக்குச் சுயம்வரம் கோடித்தனன். அது கேட்டுப் பலதேய வேந்தரும் அங்குக் குழுமினர். சுயம்வர மண்டபத்தே யாழ்வாசினை தொடங்கிற்று. தத்தையின் கலைத்திறம் கண்டோர் பெரிதும் வியந்தனர். அன்றி அவளை வெல்வார் யாருமே இல்லை.

அப்பொழுது சீவகன் அங்குத் தன் கலைவன்மை காட்ட விழைந்தனன். அதற்கு முன்பே அவனிடம் நிகழ்ந்த புகழ்க்காரணங்கள் பல. அவற்றாலெல்லாம் கட்டியங்காரன் நெஞ்சம் அவனிடம் கறுவுதல் கொண்டது. அவற்றைப் பிறரும் போற்றக்கேட்டுப் பொறுமை கூர்ந்த அவ்வரசன், தான் இராச்சிய மிழந்ததாகவே

கருதிக்கொண்டு, சீவகனைக் கொல்லும் வழி யாதென்று சிந்தித்திருந்தனன்.

இன்னனென்ன இன்புறான் இழந்தனன் அரசென
என்னைவேளவும் வாயில்தான் என்னும் சூழ்ச்சி தன்னுளான். (693)

என்று சொல்லப் பெறுகின்றது. இந் நிலையினும் சீவகன், தான் சீவிக்க வல்லனுதல் விளங்க, படை யமைத்றுக் கொண்டாயினும் அவ்விடம் செல்லற்கு ஒருப்பட்டனன். வீணைச்செல்வம் வெளிப்படும் வாயில் நேர்ந்தபோது வாளாவிருத்தல் இயலாதன்றே?

அங்ஙனம் சென்ற சீவகனை, காட்சிக்கின்பமாகக் கண்ட காந்தருவதத்தை, தேவனே என்று சிறிதுபொழுது திகைத்தனள். பின்னர் அவன் தனக்கு வாய்த்த மணவாளனே என்று மனத்துள் தேறி, அவனைக் கூடுங்காலம் நீடுதல் நினைந்து வருந்துவாளாயினள். பின்னும் அவள், அவன் கல்விநலங்காண்டற்கு, பலயாழினைத் தன் தோழியால் அவனுக்குக் கொடுப்ப, அவற்றை யெல்லாம் அவன் குற்றங்காட்டி விலக்கினன்.

இறுதியாக நல்லதொரு வீணையை வாங்கி, சீவகன் இசை யெழுப்பிப் பாடலுற்றான். அவன் கண்டமும் கருவியும் ஒன்று யிசைந்து, பருந்து நிழலுமென விருந்தா யமைந்தன. அதனெதிராகத் தத்தையும் தன் யாழினைப் பண்ணமைத்துப் பாடத்தொடங்கினாள். அவள் பாடலும் பண்ணும் வேறுபிசைப்ப, கருவியொழிந்த கண்டமும் கயபித்தலைச் சேர்ந்தது. அதனால் வாதத்திற்கு எடுத்த கீதத்திற் சிறிது குறைந்து, மாதர் இசை தோற்று மயங்கினாள் என்பர்.

இவ்வாறு தத்தையை இசையினால் வென்றான் சீவகன். இருவரும் தெய்வத்தன்மையான கந்தருவகானம் வல்லவர்கள். விஞ்சைக்கிறைவன்மகளாய் வீணைக்கிழத்தியாயினவள் தத்தை. விஞ்சைவேந்தான அச்சணந்தியைத் தந்தையாக வந்தனைபுரிந்து, வீணைச்செல்வமே தானாக விளங்கினவன் சீவகன்.

தந்தை நீயாகி ......... என்னைப் படைத்தனை (405)

என அவன் கூறியவாற்றால் இதனை அறியலாம். ஆதலின் அவளை அவன் இசையினால் வென்று மேம்பட்டானென்றல் இயைவதேயன்றோ?

வென்றவனைத் தந்தை விரைந்து மாலையிட்டுக் கணவனென்று தொழுது வணங்கி நின்றாள். அதுகண்ட அரசன் அழுக்காறு கொண்டனன்.

திருமகள் இவளைச் சேர்ந்தான் தெண்டிரை ஆடைவேலி
இருநிலமகட்கும் செம்பொன் கேமிக்கும் இறைவனாகும் (744)

என்று அவன் அங்குக்கூடியிருந்த அரசர் பிறர்க்கும் அவ்வுணர்ச்சியை ஊட்டி, 'சீவகனோடு செருச்செய்து வெல்க' என அவர்களைத் தீச்செயல்புரியத் தூண்டிவிட்டான். இதனால் சீவகனெய்திய நல்வினைப்பேறு இத்தகைத்தென்பது இனிது விளங்குமன்றே? அவனுடைய மிகுபுகழ் பெருகிவளர, மேலும் ஓர் அடியிட்ட படியாய் அமைந்தது இத்தூண்டுதல்.

கட்டியங்காரனுடைய இக்கூற்றால், கடுஞ்சமர் விளைந்தது. 'சீவகன் வாழ்க' என்ற வாழ்த்தொலி திசையெங்கும் இசைப்ப, தன்தோழரோடும் போர்க்களம் குறுகிச் சீவகன் புரிந்த போராற்றல் கண்டு விச்சாதரரும் வியந்தனர் (816). அவர்க்கிறைவனாகிய கலுழவேகனும், தன் பொற்றோளிரண்டும் பூரிப்ப மகிழ்ந்தனன். அது நோக்கி வெள்ளிமலை முழுதும் அவன் கொற்றம் கொண்டாடிக் கொடிஎடுக்கலாயிற்று (847). இதனால் சீவகன் வெற்றியைக் கலுழவேகன் தன்னுடையதாகவே கருதினமை தேற்றமாம்.

இவ்வெற்றியின்பின் சீவகன் காந்தருவதத்தையை விதிப்படி மணம்புரிந்துகொண்டு, அவளுடன் எல்லையில்லாத இன்பநலம் துய்த்தனன். இறுதியில், கலுழவேகனும் தன் நல்லாசி நிரம்பிய திருமுகவோலை விடுத்துத் தரனென்னும் விஞ்சையனால் சீவகனுக்குச் சிறப்புச்செய்தனன். இங்ஙனமாக இன்பவாழ்க்கையின் எல்லை நிலைகண்ட அவன், தான் சீவிக்கப்பிறந்தவன்—சீவகன் என்ற பெயர்க்காரணம் தெளிவாய் விளங்கச் செய்தனன் என்னலாம்.

இனி, இக்கதைநிகழ்ச்சியில் கலுழவேகன் நேரில்வந்து காரியஞ்செய்யவில்லை என்பது குறை. ஆயினும் இதற்குச் சிறந்த காரணம் உண்டு. கலுழவேகன் விடுத்த ஓலைப்பாசுரத்தில், இதற்குரிய குறிப்புக் காணப்படுகின்றது.

எந்தை திறம் முன்னம் உணர்ந் தின்னணம் விடுத்தேன். (846)

என்பது அப்பாசுரப்பகுதி. இதனை நச்சினார்க்கினியர் நன்கு விளக்கினர். 'கலுழவேகன் வந்தால், சீவகசரிதை ஒன்றும் இன்றாம்' என்று இவ்விடத்தில் அவரெழுதிய உரையின் ஒட்பம் உலகம் பெறும். [முன்னம்=குறிப்பு.]

சீவகனைச் சீவித்தலுடையவனாகச் செய்யவேதான், கலுழவேகன் அங்கு வாராதிருந்தனன். அவன் வந்தால், சீவகன் வெற்றியும் புகழும் விஞ்சைவேந்தனால் விளைந்தனவாய் முடியும். தானாகவே நல்வாழ்வுபெறவல்ல சீவகன் பெயர் மாசுண்டு மறையவும் நேரும். கதையின் மேல்நிகழ்ச்சிகள் நடைபெறுவாய்த் தடையுறவும்கூடும். அதனால், வரும்பொருளறியும் வல்லமை படைத்த விஞ்சையன் வாளாவிருந்தே சீவகன் வாழ்விற்கு மகிழ்ந்தனன் என்பதாம்.

இனி இறுதியாக இக்காந்தருவதத்தையாரிலம்பகத்தின் முடிந்த கருத்தானதொன்று, இங்குக் குறிப்பிடாமலிருப்பதற்கில்லை. சீவகன் சாமானிய மானிடனல்லன். அவருள் மிகவும் மேம்பட, வானவன்போலவைத்து, மதிக்கத்தக்கவன் என்பது இவ்வரலாற்று நிகழ்ச்சிகளால் தேர்ந்த பொருளாகும்.

கண்ணின் மாந்தரும் கண்ணிமை யார்களும்
எண்ணின் நின்சொல் இகந்தறி வாரிலை. (890)

சிலையொடு செல்வன் நின்றால் தேவரும் விலக்க லாற்றார். (1135)

என்றாற்போன்ற குறிப்புக்கள் இம் முடிபினை வலியுறுத்துவன. முன்பு அச்சணந்தி விச்சாதரர்க்கு யானைத்தீநோய்கெடுத்தது, பின்பு சுதஞ்சண இயக்கனுக்குச் சுணங்கனுருக் கெடுத்தது ஆகிய வரலாறுகளும் இதற்குச் சான்றாக வல்லன. ஆகவே 'வானேற நீண்ட புகழான்' எனப் பதிகம் கூறியது, சீவகன் சீர்த்தியை நோக்க, உண்மைநவிற்சியன்றி உயர்வுநவிற்சியாகா தென்பது போதரும்.

[தொடரும்]

ஸ்ரீ:

# இராமாவதாரத் தனிச்செய்யுள் உரை

திரு. N. R. கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரவர்கள், B.A., B.L. மதுரை.

(சுந்தரகாண்டம், உருக்காட்டுபடலம் 77.)

*தேண்டிநேர் கண்டேன் வாழி தீதிலன் எங்கோன் ஆகம்*
*பூண்டமெய் உயிரே போகப் பொய்யுயிர் போல நின்ற*
*ஆண்டகை நெஞ்சில் நின்றும் அகன்றிலை அழிவுண் டாமோ*
*ஈண்டுநீ இருந்தாய் ஆண்டங் கெவ்வுயிர் விடும் இராமன்.*

உடலும் உயிரும் மனமும், மெய்யும் பொய்யுமாய் மயங்கி நிற்கும் நிலையொன்றைக் கம்பநாடர் கற்பிக்கின்றார்.

இதன் பொருள்: தேண்டி-தேடி, நேர்-எதிரே, கண்டேன்-பார்த்துவிட்டேன்; எங்கோன்-எம் தலைவனான இராமன், தீதிலன்-தீங்கில்லாதவனானான், வாழி-அவனும் ஸீதையும் வாழக்கடவர்; ஆகம்-சரீரத்தை, பூண்ட-தரித்துக்கொண்டிருந்த, மெய்-உண்மையான, உயிரே-உயிர்தானே, போக-அந்தச் சரீரத்தைவிட்டுப்போய் விட, ஆண்டகை நெஞ்சினின்றும்-ஆண் தகைமை மிக்கவனான இராமனுடைய மனத்திலிருந்து, பொய் உயிர்போல் நின்ற நீ-பொய்யாயிருந்தும் உயிரைத்தரும் திறனோடு நின்ற (உன்னுருவாகிய) நீ, அகன்றிலை-சிறிதும் விலகவில்லை; அழிவுண்டாமோ- உங்களிருவருக்கும் ஒருநாளும் அழிவில்லை; நீ ஈண்டிருந்தாய்-இராமன் உயிராகிய நீ இங்கே இருக்கிறாய்; ஆண்டு-அவ்விடத்தில், அங்கு-தான் உயிரை விட்டுவிடவேண்டுமென்று துணிந்தபோது, இராமன், எவ்வுயிர் விடும்-எந்த உயிரை விடுவான்; என்றவாறு. நீ என்பது இரண்டிடத்தும் கூட்டத்தக்கது.

இராமனுக்கு ஸீதை மெய் உயிர், உண்மையான பிராணன். அந்த உயிர் புறத்தே இருக்க, அவனைப் பார்த்துப் பார்த்து

இராமன் தன் மனத்தில் இருத்திக்கொண்ட அவளுடைய நிழலான பிரதிபிம்பம் பொய்யாயிருந்த போதிலும், இராமனுக்கு உயிரைக் கொடுக்கும் திறன் வாய்ந்ததாக இருக்கிறது.

இந்தப் பொய்யுயிர் மனத்திற்படிந்துபோன ஒரு நிழலாதலின் அவனால் விடமுடியாது; அதுவும் அழியாது. நீ இங்கு இருக்கிறாய்; உன்னையும் அவனால் விட முடியாது. ஆகையால் இராமன் உயிர் விடுவதென்பது இயலாத காரியம்: என்று அநுமன் ஸீதையிடம் தெளிவித்தனன்.

சீதை உயிரும் இராமன் உடலுமாக இங்குக் கூறியிருப்பது போலவே, பிறவிடத்திலும் பேசப்பட்டுள்ளது.

> ஓடிவந்தனன் சாலையின் சோலையினுதவும்
> தோடிவர்ந்தபூஞ் சுரிகுழ லாள்தனைக் காணான்
> கூடுதன்னுடை யதுபிரிந் தாருயிர் குறுகா
> தேடிவந்தது கண்டில தாமென நின்றான்.

என்பது சடாயு உயிர்நீத்தபடலம் 159-வது செய்யுள். மாயமானாக வந்த மாரீசனை வதைத்துவிட்டுப் பர்ணசாலைக்குத் திரும்பினபோது இராமனுடைய பரிதாப நிலையைச் சித்திரிக்கின்றது இச் செய்யுள். உயிர் தங்கும் கூடான ஓர் உடம்பு, தனியாகப் பிரிந்துபோய்த் திரும்பிவந்து, தன்னுடைய உயிரைச் சேரப் பார்த்தபோது அதனைக் காணாது செயலற்று நின்றதுபோல, சீதையைக் காணாத இராமன் செய்வகை யறியாது திகைத்தனன்; என்பது இங்கே கவியின் கருத்தாம்.

இக் கருத்தினை யொட்டியே, மேல் உருக்காட்டுபடலச் செய்யுளிலும், 'மெய்யுயிரே போக' என்றார். இராமனாகிய சரீரத்தை ஸீதையாகிய மெய்உயிர் தரித்திருந்தது என்பதாம்.

இவ்வாறே இப்படலத்தின் மூந்தின செய்யுள் தொன்றிலும் (76)

> வண்டுறை சாலை வந்தான் நின்றிரு வடிவு காணான்
> உண்டுயிர் இருந்தா னின்னல் உழப்பதற் கேது வொன்றே.

என்றது காணலாம். இங்கு 'உண்டுயிரிருந்தான்' என்றது தன்னுயிரைத் தானே உண்டு அழித்தவன்போ லிருந்தான் என்றவாறு.

அன்றி, 'உயிர் உண்டு?' என்று வினவாக்கி, எதிர்மறையாக அவனுக்கு இன்னும் உயிருண்டோ? இல்லை; ஆனாலும் உயிருடையவன் போல் இருந்தான்: எனப் பொருள் கொள்ளலும் ஒன்று.

இதனை யடுத்த பாட்டில் (78)

இன்னுயி ரின்றி யேகும் இயந்திரப் படிவ மொத்தான்

என்றதும் நோக்கற்பாலது. அங்கே 'மெய்யுயிர்' என்றதை இங்கே 'இன்னுயிர்' என்றார். பொய்யுயிராகிய நிழல், நின் திருவடிவாகிய மெய்யுயிரை இழந்து நிற்கும் தன்மையைக் குறித்துத் துன்புறுதலின், சீதையின் திருவடிவே இன்னுயிரென்பதும்; இராமன் மனத்திலுள்ள இதன் நிழல் துன்பந் தரும் பொய்யுயிரென்பதும் கவியின் நுட்பமான கருத்து.

இந்த நிழலாகிய பொய்யுயிரின் வலிமையே, வாலி இராவணன் முதலானவர்களை வதைக்குந் தன்மையை இராமனுக்கு உதவுமானால், ஸாக்ஷாத் ஸீதையோடு கூடின இராமனும் அவனுடைய நிக்ரஹ அநுக்ரஹ சக்தி ஸாமர்த்யங்களும் எத்தகையன என்று சொல்லவும் வேண்டுமோ?

இனி, 'வாழி' என்றது மங்களக் குறிப்பு. இராமனுக்கும், சீதைக்குச், அவளைத் தேடிக் கண்ட தனக்கும் மங்களம் கூறிக் கொள்ளுகின்றான் மாருதி. இங்கே 'தீது' என்றது, இராமனுக்கு சீதையின் பிரிவு ஏற்பட்டதையும் அதனால் வந்த துன்பத்தையும் குறித்தது.

இவ்வாறு அநுமன் சீதையைக் கண்டதை இராமனிடம் சொல்லும்போது, (திருவடி தொழுத படலம் 58)

கண்டனென் கற்பினுக் கணியைக் கண்களால்
தெண்டிரை அலைகடல் இலங்கைத் தென்னகர்
அண்டர் நாயகஇனித் துறத்தி ஐயமும்
பண்டுள துயருமென் றனுமன் பன்னுவான்

எனக் கவி கூறியுள்ளார். முன்பு 'நேர்கண்டேன்' என்றது, 'கண்ட னென் கண்களால்' எனப்பட்டது இங்கு. 'தீதிலன் எங்கோன்' என்றபோதே இராமனுடையபிரிவும் அதனால் அவனுக்கு வந்த துன்பமும் நீங்கிவிட்டமையால், அது கருதி இங்குப் 'பண்டுள துயர்' எனப்பட்டது இராமன் சீதையைவிட்டுப் பிரிந்ததும் அதனால்வந்த துயரமும் பழைய செய்திகளாய் இறந்தகாலத்திற் கழிந்தனவாம்; இப்பொழுது ஒன்றுமில்லை என்றவாறு.

இனி, 'அழிவுண்டாமோ' என்றது, புறநிலையாக இராமன் உடலினின்றும் நீ அகன்றனையேயன்றி, அகநிலையாக அவன் நெஞ்சினின்றும் நீ அகன்றிலை என்றவாறு. உன் நினைவாக அவன் இருக்கிறான் ஆகலின், அவ் வுருவுக்கு ஒருநாளும் அழிவில்லை என்பதும் ஆம். தன்னைக்கொல்ல முனைந்துவரும் இராமனுடைய உண்மையுயிரை இராவணன் தன் அரண்மனைத்தோட்டமான அசோகவனத்தில் வைத்து, மிகுந்த கவனத்துடன் பாதுகாத்து வருகிறான் என்பது இதனால் தோன்றுங் குறிப்பாகும்.

இனி, ஈண்டு, ஆண்டு என்பன இடங்களைக் குறிப்பதால், அடுத்துவரும் 'அங்கு' என்பது காலசமாதியிற் பொருள்தந்து, இராமன் சீதையின் பிரிவை ஆற்றாதவனாய்த் தற்கொலை புரிந்து கொண்டு உயிரை விடுவதாக முயற்சிசெய்யும் காலத்தும் என்று கொள்ளக்கிடந்தது. மெய்யுயிர் இங்கே இருக்கிறது. பொய் யுயிர்க்கு அழிவில்லை. இரண்டுயிர்களில் ஒன்றையும் அவன் மாய்த்துக்கொள்ள வல்லவனல்லன் என்றவாறு. மெய்யுயிரே என்பதில் ஏகாரம், இவள்தான் உண்மையுயிர் என்னும் தேற்றம். அழிவுண் டாமோ—ஓகாரம் எதிர்மறை; எக்காலத்திலும் உண்டாகாதென்பதாம்.

---

# உவமை முதலிய அணிகள்

வித்துவான் திரு. K. S. விசுவநாதசாஸ்திரி அவர்கள், தமிழ்த்துறைத்தலைவர்,
S. V. O. கல்லூரி, திருப்பதி.

## 1. காவியமும் அணியும்

காவியமாவது நல்லிசைப் புலவர்களின் செய்யுள்களாம். அச் செய்யுள் உணர்த்தும் நகை முதலிய சுவைகளும், தொனி எனப் படும் பிற உள்ளுறைகளும், காவியத்தின் உயிராம். சுவைகளையும் உள்ளுறைகளையும் உணர்விக்கின்ற சொல்லும் பொருளும், காவியத்தின் உறுப்புக்களாகின்றன. ஆதலின் சுவை முதலியன அங்கி எனப்படும். சொல்லும் பொருளும் அங்கம் எனப்படும். ஆகவே சுவை முதலியனவும் சொற்பொருள்களும், முதலும் சினையுமாகின்ற தொடர்புடையன ஆயின.

இவ்விதம் முதலும் சினையுமாய அவற்றுள், முதலும் அழகுடையதாதல் வேண்டும்; சினையும் அழகுடையதாதல் வேண்டும். அப்பொழுதே காவியம் அல்லது செய்யுள் அழகுடையதென்று சிறப்பிக்கப்படுகின்றது. அன்பு ஆண்மை முதலிய உயிர்ப்பண்பும், உறுப்புக்களை அழகு படுத்துகின்ற ஆடை அணிகளுஞ் சேர்ந்தே பலராலும் பாராட்டப் பெறுகின்ற சிறப்பை ஒருவனுக்கு அளிக்கின்றன.

இவற்றில் அன்பு, ஆண்மை முதலிய உயிர்ப்பண்புகள் குணம் என்று வழங்கப் பெறுவது போலச் சுவை முதலியவற்றோடு இணைந்து இயல்கின்ற நடை வகைகளும் குணமென்று வழங்கப் படுகின்றன. தொடி, வளை முதலியன உறுப்புக்களை அழகுபடுத்தி அணி என்று வழங்கப் பெறுவதுபோல், சொற்பொருள்களோடு இணைந்து நின்று அழகு செய்கின்ற உவமை முதலியனவும் அணி என்று வழங்கப் பெறுவனவாயின.

எனவே, செய்யுளின் சிறப்பிற்குக் காரணமாவன குணமும் அணியும் என இருவகைப்பட்டனவாம். அவற்றுள் இங்கே விளக்குதற்கு எடுத்துக் கொள்ளப் பெறுவது அணி ஒன்றுமேயாம்.

## 2. அணியாவது யாது?

ஈண்டு அணி என்று வழங்கப்பெறுவது உவமை, உருவகம் முதலிய பொருளணியே யாம். யமகம் முதலிய சொல்லணிகள் தொனி நோக்கிற்குத் தடை விளைவிப்பன; ஆகலின் இவ்விடத்து அவை ஏற்கப்படுவனவாகா. ஆனால் ஏரல் எழுத்துப் போல்வதோர் விழுக்காடாகப் புலவனது முயற்சியின்றியே அமையுமாயின் அவை விலக்கப்படாவாம். உவமை உருவகம் முதலிய பொருளணிகள் காவியத்தை அழகுபடுத்தும் முறையில், தொடியும் வளையும் மாலையும் போல்வன, அவ்வுறுப்புக்களைச் சார்ந்து நின்று அவ்வுறுப் புடையாரை அழகுறச் செய்வதுபோற் சொல்லும் பொருளுமாய உறுப்புக்களைச் சார்ந்து நின்று, கவிதைவனிதையை அழகுறச் செய்கின்றன.

இங்ஙனம் அழகுறச் செய்கின்ற இயல்புபற்றியே உவமை முதலியன அணி எனவும் பட்டன. தொல்காப்பியனார் உவமையை அணி என்ற பெயரால் வழங்காரேனும் செய்யுட்கு உவமை உபகாரப்படுவதாகிப் பயனளிக்கும் இயல்பு கருதியே உவமவியலைச் செய்யுளியலின் முன் அதனோடு சார வைத்துள்ளார்.

இனி அலங்காரம் என்று உவமை முதலியவற்றை வழங்குவதும், அவற்றின் அழகுபயக்கும் இயல்பு காரணமாகத் தோன்றியதே. ஆதலின் காவியத்தின் அழகுக்கு ஏதுவாந் தன்மையே அலங்காரத் தன்மையாம் என்பர் அணிநூலார். அணி அலங்காரம் என்பன ஒரு பொருள் குறிப்பனவே.

அன்றியும், நம் மனத்திற் கருத்து இயல்பாக எழுகின்ற விதத்தையும் அதை இயல்பாக வெளிப்படுத்தும் விதத்தையும் நாம் அறிவோம். இயல்பாக அது வெளிப்படும் வகையில் அதனை வெளிப்படுத்தாமல், அது மிக்க ஆற்றலுடன் தோன்றுமாறு வேறு வகையில் வெளிப்படுத்தல் அணி இயல்பென்று கொள்வர் ஆங்கில அறிஞர்கள்.

"A figure of speech is a departure from the ordinary form of expression, or the ordinary course of ideas, in order to produce a greater effect" எனவும், 'Abnormal mode of expression used for effect" எனவும் வருவன காண்க.

இதனால் இயல்பான முறையில் வெளிப்படுத்தாமல், மாற்றி வேறொரு வகையில் ஒரு செய்தியை வெளிப்படுத்துவதன் வாயிலாக அதனை ஆற்றல் மிக்கதாகச் செய்வது அணி என்று கொள்ளப்பெறுவதாயிற்று. அதுவே பயனுடையதொரு நெறி எனவும் கொள்ளப் பெறுவதாயிற்று.

## 3. தமிழும் அணியும்

அணிகள் பலவற்றிற்கு அடிப்படை உவமையே. அவ்வுவமை ஒன்றையே விளக்கிச்செல்கிறது தொல்காப்பிய உவமவியல். பின்புதோன்றிய தண்டியலங்காரம் முதலியன, உருவகம் முதலாய பிற அணிகளையும் விரித்துரைக்கின்றன. இலக்கியங்களுள்ளும் இவ் வணிகள் பலவும் பயின்று வருகின்றன. இலக்கியங்களில் வரும் இவ் வணிகளையும் காண்கிறோம். தண்டி முதலிய இலக்கணங்களையும் கற்கின்றோம். அவ் விலக்கணப் பயிற்சி எவ்வளவில் பயன் படுகின்றது? இஃது உவமை, இஃது உருவகம் என்று பெயர் குறிக்குமளவில் அமைந்துவிடுகின்றது. இலக்கியங்களில் இவ் வணிகள் வருவது எதற்காக? இவற்றாற் பயன் என்? என்று சிந்திப்பதில்லை. அச் சிந்தனை எழாது போகவே, அவற்றின் பயனும் உணரப்படுவதில்லை. அப் பயன் தோன்றாதுபோகவே உவமை, உருவகம் என்று அணிப்பெயர் குறிப்பதுங்கூடச் சிலர்க்கு வெறுப்பை விளைப்பதாகின்றது. தமிழிலக்கியங்களுட் பலவகை அணிகளும் பயின்று வரும்போது, அவ் வணிகளுக்குரிய இலக்கணங்களும் பல கூறிவைத்திருக்குமிடத்து அவ் வணிகளைத் தமிழுக்கு உரியன அல்ல என்று ஒதுக்குவதுங் கூடுமோ? அணிகளின் தோற்றமோ எம்மொழிக்கும் பொதுவாக இயங்கும் இடல்புடையது; சுவைகளால் இனிமைவாய்ந்தே செய்யுள் அல்லது காவியத்தை அழகு படுத்திப் பயன் மிக விளைப்பது. அணித்தோற்றம் முதன் முதலில் தன்மைநவிற்சியாகத் தோன்றிப் பிறகு உவமையாகக் கிளைத்து, அதனின்றும் உருவகம் முதலிய பல அணிகளாகத் தழைத்தோங்குகின்றது. இவ்வாறு நம் தமிழ்மொழியின்கண்ணும் இலக்கிய இலக்கண வளர்ச்சிகளை ஒருங்கே பெற்றுள்ள இவ் வணிகளின் பயனை ஆராய்ந்தறிந்து பயன்பெறுவதல்லது இவை வேண்டா என்று விலக்குவது தக்கதன்றாம்.

## 4. உவமையின் இன்றியமையாமை

ஆயின், பழந்தமிழ் இலக்கணமாய தொல்காப்பியம் உவமவியலில் உவமம் ஒன்றையே வகுத்துரைத்திருக்கப் பிற்கால இலக்கண நூல்களே உருவகம் முதலாய பிற அணிகளையும் விரித்துரைக்கின்றன. உவமை முதலியவற்றிற்கு அணி என்று பெயரிட்டு வழங்குவதும் பிற்கால இலக்கணங்களே. அணி என்பதன் பெயர்க்காரணம் முன்பே மொழியப்பட்டது. அணிகள் பலவற்றிற்கும் உவமையே அடிப்படையாதலின், உவமையை முதலில் நிறுத்திப் பின் உருவகம் முதலிய பிற அணிகளை முறையே விளக்கிச் செல்கின்றன அணிநூல்கள். அவ்வாறு விளக்கிச் செல்கின்ற அணிகள் பலவற்றுள்ளும் உவமை மட்டும் பண்டுதொட்டே வழங்கிவருவது. தொல்காப்பியத்துள்ளும் இது கூறப்பெறுவது. ஆனால் அது அணிப்பெயரால் அங்கு வழங்கப்பெறாவிடினும், அது பொருள் விளக்கத்திற்கு இன்றியமையாதது என்பதும் செய்யுட்கு உபகாரப்படுவதென்பதும் இவ்வகை இயல்பினால் இனிமையும் அழகும் பயத்தற்கு ஏதுவாவது என்பதும் போதரும். இன்றேல், உவமவியல் என்று தொல்காப்பியம் ஒரு இயலை வகுத்திருப்பதும், அதனைச் செய்யுளியற்கு முன் அதனைச்சார வைத்திருப்பதும் பயனில் செயலாம்.

அன்றியும், நன்குவிளங்காததொரு பொருளை விளக்கிக் காட்டுதற்கு விளக்கமானதொரு எடுத்துக்காட்டு இன்றியமையாதது. இவ் வகையில் உவமை பெரும்பயன் விளைப்பதாகவும் அமைகின்றது. "மேற் பொருள்புலப்பாடு கூறிய மெய்ப்பாட்டியலோடு இயைபுடைத்து; என்னை? உவமத்தானும் பொருள் புலப்பாடே கூறுகின்றானாதலின்" என்ற பேராசிரியர் உரையும் இதனை வலியுறுத்தும்.

"மாரியன்ன வண்கைத்
தேர்வே ளாயைக் காணிய சென்மே" (புறம் 133)

என்பது வேள் ஆய் என்பானது வள்ளன்மையைப் பாராட்டுவது.

அவ் வள்ளலினது ஈகைக்கு எடுத்துக்காட்டு மாரி. கைம்மாறு கருதாமல் மழையைப் பொழிந்து உதவுவதும், உணவும் நீருமாய பல் வகைப் பொருள்களையும் விளைவித்து உலகு நுகருமாறு செய்வதும், இதன் வாயிலாக உலகம் இன்புறச் செய்வதும் மாரியின் பயன்மிக்க உபகாரச் செயலாம். ஆய் வள்ளலினது ஈகையும் இவ்விதமே பல்வகைப் பயன்களையும் விளைவிப்பதாம். ஈகைச் சிறப்பின் பேரெல்லை இவ் வுவமையின் வாயிலாக உணரப்பெறுவ தாகின்றது. "மாரியன்ன வண்கைத் தேர்வேள் ஆய்" என்று மிகச் சுருங்கிய வடிவில் அமைந்து சுருக்கக்கூறல் விளங்கவைத்தல் முதலாய அழகமைப்பும் உடையதாயிற்று.

> "செம்புலப் பெயனீர் போல
> அன்புடை நெஞ்சம் தாங்கலந் தனவே" (குறுந். 40)

காதலர் இருவரது நெஞ்சமும் இரண்டறக் கலந்திருக்கின்றது. அவ் வன்புடை நெஞ்சக் கலப்போ கண்ணுக்குப் புலப்படாதது. அக் கலப்பின் இயல்பையும் எடுத்துக்காட்டுதல் வேண்டும். "செம்புலப் பெயனீர் போல" என வரும் உவமையான் அது குறைவின்றி நிறைவேறுகின்றது. செம்புலம் - செவ்வல் நிலம். அதன்கண் பெய்த மழைநீர், செவ்வல் மண்ணோடு கலந்து அதன் நிறம் சுவைகளைப் பெற்று ஒன்றுபடுதலை நாமறிவோம். இச் செந்நிலமும் மழைநீரும் ஒன்றற்கொன்று எட்டாத தொலைவில் உள்ளனவேனும் இரண்டும் ஒன்று சேர்ந்த அளவில் இரண்டன் தன்மையும் ஒன்று படுவதுபோல அக்காதலர் நெஞ்சமும் கலந்து ஒன்றுபடுகின்றன. இவ் வியல்பை விளக்கிக் காட்டித் தலைவன் தலைவியைத் தேற்று கின்ற முறையில் இது தலைவனால் மொழியப்பெறுகின்றது. பிரிவிற்கு உடன்படாத தலைவியும் இவ் வியல்பை நன்கு உணர்ந்து தெளிகின்றாள். இத்தகைய பெரும் பயனை விளைப்பதாகின்றது இவ் வுவமை. இஃது இன்றேல் இப் பயன் எளிதில் கிட்டாத தாகும்.

இஃதன்றியும் இவ் வுவமை முதலிய அணிகள் "சுருக்கக் கூறல் விளங்க வைத்தல்" போன்ற அழகு இயல்புகளைச் செய்யுளின் கண் அமைவிப்பனவும் ஆகின்றன. இங்ஙனம் அழகு செய்வ

தோடு பொருள்விளக்கமாகிய பெரும்பயன் அளிப்பனவும் ஆகின்றன. இவ் வியல்புகளனைத்தையும் நல்லறிஞர்கள் நன்கு சிந்தித்து உணர்வார்களாக.

## 5. உரையாசிரியர்களின் அணிக்குறிப்பு

இவ் வுவமை உருவகம் முதலிய அணிகள் இத்துணைப் பயன் அளிப்பனவாக அமைவதனாலேயே சிறந்த உரையாசிரியர்களும் இவ் வணிகளைக் குறித்துச் செல்வதன் வாயிலாகப் பொருள் விளக்கம் சுருங்கிய அளவில் தருவாராயினர்.

> "இளைதாக முண்மரம் கொல்க களையுநர்
> கைகொல்லும் காழ்த்த விடத்து" (திருக்குறள் 879)

இக்குறட்குப் பரிமேலழகர் தருகின்ற உரைப்பகுதியையும் நோக்குக. "களையப்படுவதாய தம் பகையை அது மெலிதாய காலத்தே களைக. அன்றி வலிதாய காலத்துக் களையலுறின் தப்மை அது தான் களையும் என்பது தோன்ற நின்றமையின் இது பிறிது மொழிதல்" என்பர் பரிமேலழகர். இக் குறளில் வெளிப்படையாக மொழியப் பெறுவது உவமம் ஒன்றுமட்டுமே. இதன் வாயிலாக அறியவேண்டும் பொருள் உய்த்துணர வைக்கப் பெறுவதாகின்றது. இவ்வாறு வருவனவற்றைப் பிறிதுமொழிதல் அணி என்பர் அணியிலக்கண நூலார். அவ்வணியின் இயல்பை உணர்ந்த பரிமேலழகர் அதனால் காணவேண்டும் பொருள்விளக்கத்தை வெளிப்பட மொழிந்து விளக்கிச் செல்கின்றனர். இவ்வாறன்றி அணிப்பெயர் மட்டும் குறித்துப் பொருள்விளக்கத்தை உய்த்துணர விட்டுவிடுவதும் உண்டு. அத்தகைய இடங்களில் நாம் விளக்கமாக உய்த்துணர்தல் வேண்டும் என்பதே அவர் கருத்தாம்.

## 6. உவமையே பிற அணிகட்கு அடிப்படை

மேற்காட்டிய பிறிதுமொழிதல் போன்ற அணிகள் உவமை அடிப்படையில் தோன்றுவனவே. ஆயினும் உவமமும் பொருளும் பொதுத்தன்மையும் உவம உருபும் ஆகிய உறுப்புக்கள் குறைவின்றி அமையப் பெறாது மொழியும் முறையும வேறுபடுகின்றன. பிறிதுமொழிதலில் உவமம் ஒன்றே வெளிப்பட்டு நிற்கின்றது. அதன்வாயிலாக இடம்நோக்கிப் பொருள் உய்த்துணர வேண்டிய

தாகவே அமைகின்றது. இதனுள் கூறவேண்டிய பொருள் வெளிப் படையாகக் கூறப்பெறாமல், உவமம் ஆதற்குரிய பிறிதொன்று கூறப் பெறுகின்ற அளவில் பொருள் உணர நிற்றலின் இது பிறிது மொழிதல் எனப்பட்டது. இதனை ஒட்டு, சுருக்கு எனவும் வழங்குவர். இதற்கு உவமை அடிப்படை என்பது சொல்லாமலே விளங்கும். இவ்விதம் உவமையின் வேறுபட்டு வருவன பலவற்றையும் தொல்காப்பியர் வேறுபட வந்த உவமத் தோற்றம் என்றடக்குவர். பிற்கால அணியியல் நூல்களோ இவ்விதம் வேறுபட்டு வருவன வற்றை உருவகம் முதலிய பிற பெயர்களைக் கொண்டு வழங்குகின்றன. அவற்றின் இலக்கணங்களையும் வேறு வேறு வகுத்துத் தருகின்றன. இதனைப் பிற்கால வளர்ச்சி என்று கோடல் பொருந்தும். உவமை யிலக்கணம் ஒன்றே கூறுகின்ற தொல்காப்பியரும் உவமையினின்றும் இவ்வாறு வேறுபட்டு வருகின்ற பலவற்றின் இயல்பையும் நோக்கியே,

> "வேறுபட வந்த உவமத் தோற்றம்
> கூறிய மருங்கிற் கொள்வழிக் கொளாஅல்" (தொல். உவம)

என்பது போன்ற விதிகளையும் அமைப்பாராயினர். பிற அணிகளின் இயல்பும் உவமை அடிப்படையில் தோன்றுவதே. உவமையும் பொருளும் ஒன்றாக ஏற்றி மொழிவது உருவகம் எனப்படுகின்றது. உவமைகாட்டிப் பின் அதனை விலக்குவது விலக்கணி எனப்படுகின்றது. இவ்வாறு பல்வகையானும் வேறுபட்டு வருவனவே பிற அணிகள் ஆகின்றன. இதனாலேயே,

> "உவமை என்னுந் தவலருங் கூத்தி
> பல்வகைக் கோலமும் பாங்குறப் புனைந்து
> காப்பிய வரங்கிற் கவினுறத் தோன்றி
> யாப்பறி புலவர் இதய
> நீப்பறு மகிழ்ச்சி பூப்ப நடிக்குமே"

எனப் பிற்கால அறிஞரும் உவமையின் இயல்பைப் பாராட்டுவாராயினர். அணிவளர்ச்சியுங்கூடக் காலப்போக்கில் பெருகிக்கொண்டே வந்திருக்கின்றது. தண்டியில் கண்டது முப்பத்தைந்து அணிகளே ஆயினும், மாறனலங்காரம் அறுபதுக்கும் மேற்பட்ட அணி

களைக் கூறுகின்றது. அதன்பின் தோன்றிய அணியிலக்கணமோ அணிகளை நூறாக வகுத்திருக்கின்றது. இதனை நோக்க அணி வளர்ச்சி காலப்போக்கில பெருகியிருக்கின்றமை நன்கு காணப் பெறும்.

## 7. அணி வளர்ச்சியின் இன்றியமையாமை

செய்யுள் செய்கின்ற நல்லிசைப் புலவர்கள் தாம் கூறக் கருதும் பொருளை இயற்கைக்கு மாறுபடாத வகையில் அழகுபடுத்திக் கூறுவதைத் தன்மையணி என்பர். உவமை போன்ற வகையில் வேறுபடுத்திக் கூறுவதை, உவமை உருவகம் முதலிய பெயர்களால் வழங்குவர். ஆதலின் அணிவகை முதன்முதலாக இருவேறு வகையில் கிளைக்கின்றது. அதன்பின் உவமை அடிப்படையில் உருவகம், தற்குறிப்பேற்றம் போன்ற பிற அணிகளும் பெருகுகின்றன. இவற்றுள் உவமை ஒன்றே பண்டைக் காவியங்களில் பெரிதும் பயின்று வருவது. ஆனால் பிற அணிகளும் அங்கே காணப்படாதன அல்ல.

> "மெல்ல வியலும் மயிலு மன்று
> சொல்லத் தளரும் கிளியு மன்று" (கலி. 55.)

இதுவும் உவமை அடிப்படையில் தோன்றுவதே. எனினும் உவமையினின்றும் வேறுபட்டு வருவதே. மயிலுமன்று, கிளியு மன்று என்ற விதமாக விலக்கப்பெறுகின்றமை உவமை இயல்பிற்கு மாறானதே. இம்மாறுபாடு நோக்க இதனை விலக்கணி என்று கொள்வது பொருத்தமாகின்றது. இவ்வாறு வருவனவற்றை உவமை வேறுபாடு என்று பொதுவகையில் கொள்வதைக் காட்டிலும், அவற்றின் சிறப்பியல்பு நோக்கிச் சிறப்புப்பெயர் கொடுத்து வழங்குவதும் சிறப்புடையதாம். இத்தகைய வளர்ச்சியும் ஓரளவிற்கு ஏற்புடையதாகவே காணப்படுகின்றது. பிற்கால இலக்கியங்கள் இவ்வளர்ச்சிக்குப் பெரிதும் இடம் தருகின்றன. ஆதலின் அதனுள்ளும் ஏற்பது ஏற்கத் தகும்.

# மகாபாரதம்— நூல்வரலாறு

மட்டுநகர் வித்துவான், பண்டிதர் திரு. F. X. C. நடராசா அவர்கள்,
Research Assistant, Official Languages Commission, Colombo.

இதிகாச இலக்கியங்களில் வான்முறையில் இரண்டாம் இடத்தைப் பெற்று நிற்கும் நூல் பாரதமாகும். இதன் பெருமை நோக்கி மகாபாரதம் என அடைமொழி கொடுக்கப்பெற்றது.

பாரதம் என்ற சொல்லுக்கு, பாரதயுத்தத்தைப் பற்றிய காவியம் என்று பொருள் எனப் பாணினி சூத்திரம் வகுத்துள்ளார். சூத்திர விருத்தியுரையிலும் இவ்வகைப் பொருளே வலியுறுத்தப்பட்டிருக்கின்றது. சங்கதமொழியில் வளர்ந்துள்ள சில சுலோகங்களும் இப் பொருளை வலியுறுத்துகின்றன. பரதர்களின் பெரியபிறப்பினைக் கூறுதலின் மகாபாரதம் என்றும் கேட்போர்க்கு நீண்டஆயுளைத்தந்து நான்கு வேதங்களிலும் பார்க்கப் பெரிதாயும் கனமாயுமிருத்தலின் மகாபாரதம் என்றும் சொல்லப்படும் என்பதற்கும் இதன்கண் சுலோகங்களுண்டு. எனினும், பெரியதும் பாரதயுத்தத்தைப் பற்றியது மாகையாற்றான் மகாபாரதம் எனப்படுகின்றது என்ற பொருளே பொருத்தமாம். பாரதன் என்பவனுடைய மரபிற் பிறந்த அரசர் பெருமக்களைப் பாத்திரங்களாகக் கொண்டு செய்யப்பட்ட நூல் என்பாருமுளர்.

மகாபாரதம் இதிகாசம் என்றும். புராணங்களினியல்புடைய இதிகாசம் என்று வழங்கப்படும் கிரந்தமும் அபேதமுற்றுப் புராணத்துள் அடங்குவன என்பர்.

> தோற்றமுலக மீண்டொடுங்கல் தூகள்தீர் மன்வர் தாமுனிவ
> ராற்றலரசர் மரபவர்தஞ் சரிதமென்று மோரைந்துஞ்
> சாற்று புராண விலக்கணமென் றறிஞருரைப்பர்,

என்று புராணஇலக்கணத்தைக் கூறுகின்றது கூர்மபுராணச் செய்யுள். இதிகாசமாவது அறம் பொருள் இன்பம் வீடு என்னும் சதுர்வித புருடார்த்தங்களைப் பழங்கதைகளோடு சேர்த்தறிவிக்கும் நூல் என்பர். இதிகம் என்பது பாரம்பரிய உபதேசம்: ஆசம் என்பது இருப்பது.

பாரம்பரிய உபதேசம் அமைந்திருக்கின்ற தன்மையால் மகாபாரதம் இதிகாசம் எனப்படும். இராமாயணமும் இதிகாசமே. சிவாகமமும் இதன்பாற்படும்.

மகாபாரதத்தினை இதிகாசம் எனவும், கார்டணவேதம் எனவும், ஐந்தாம் வேதம் எனவும், தர்ம சாத்திரம் எனவும், அர்த்த சாத்திரம் எனவும் கூறுவர். சங்கராச்சாரியார் இதனைச் சுமிருதி என்பர். நூலின் முதற் சுலோகத்தில் "ஜய" என்ற சொல்லால் இந்நூல் குறிக்கப்பட்டுள்ளது. "ய" என்பது ஒன்றையும் "ஜ" என்பது எட்டையும் குறிக்கும் என்று கணிதநூல்கள் கூறுமாகையால் "ஜய" என்பது பதினெட்டைக் குறிக்கும். ஆகவே இலக்கணை என்ற விதியால் பதினெட்டுப் பருவம் கொண்ட பாரதத்தைக் குறிக்கும் என்பர் இலக்கணநூலார். ஆகவே இதற்கு "ஜயோநாம இதிகாசம்" என்றபெயர் ஏற்படலாயிற்று.

மகாபாரதம் முதன்முதலாகப் பராசருக்கும், சத்தியவதிக்கும் புத்திரராய்ப் பிறந்த கிருட்டின துவைபாயனரால் யாக்கப்பட்டது. இவரைக் கிருட்டின துவைபாயன வியாசர் என்பர்.

பொதுவாகச் சாதாரண மக்கள் வியாசரால் இயற்றப்பட்டதென்பர். வியாசர் எனினும் தொகுத்தவர் எனினும் பொருள் ஒன்றுதான். ஆகவே வியாசர் என்னும் பெயர் பொதுப் பெயராகும். வேதத்தை, இதிகாசத்தை, பழங்கதைகளை, விரித்துரைத்தவர் பலராகையால் வியாசர்களும் பலர் என்று சொல்லக் கேள்விப்படுகிறோம். கிருட்டின துவைபாயன வியாசர் தாம் யாத்த பாரதகதையை சுமந்து, சைமினி, சுதர், வைசம்பாயனர் என்ற முனிவர்களுக்கு உபதேசித்தார். உபதேசித்த கதையை விநாயகரைக்கொண்டு எழுதுவித்தனர் என்பர்.

சிடர்களாகிய முனிவர்கள் ஒவ்வொருவரும் பாரத சங்கிதையைச் செய்தவர். வைசம்பாயனரது சங்கிதையில் 24000 சுலோகங்களுண்டு. உபாக்கியானங்களைக் கூறும் சுலோகங்களையுஞ் சேர்த்தால் ஒரு இலட்சம் சுலோகங்களாகும் என்றும் கூறப்படும். வியாசரோ 150 சுலோகத்தில் சுருக்கமாகப் பாதரின் சரித்திரத்தைக் கூறினர். பின்னர் அறங்களைப் பற்றிய சுலோகங்களும், இறுதியில் சேர்க்கப்பெற்ற உபாக்கியான சுலோகங்களுஞ் சேரப் பாரதம் பெரிதாய் வளர்ந்துவிட்டது. இன்னும் இந்நூலுக்குப் புறம்பானதும் அனுபந்தம் எனப்பொருள்படும் 'கிலம்'

என்ற சொல்லால் அறியப்பெற்ற அரிவம்சம் என்ற பகுதியும் ஈற்றில் சேர்க்கப்பட, பாரதம் மேலும் வளரலாயிற்று. இச் சுலோகங்களில் 8800 சுலோகங்கள் விநாயகர்க்காக இயற்றியதென்றும் அவை எளிதிற் புலப்படாதவை யென்றுங் கூறுவர். ஆனல் ஆதிபருவத்தில் ஒரு சுலோகம் தெரிவித்குமாறு இந்நூல், பருவங்கள் 18, அவற்றிலுள்ள அத்தியாயங்கள் அல்லது சருக்கங்கள் 1923, சுலோகங்கள் 84836; அரிவம்சத்திலுள்ள சுலோகங்கள் 12580 என்ற கணக்கின்படி அமைந்திருத்தல் வேண்டும். ஆனல் தற்போதுள்ள பிரபல பதிப்புகளில் 18 பருவங்களும் 214 சருக்கங்களும், 83246 சுலோகங்களுடன் அரிவம்சத்தில் 12,580 சுலோகங்களுஞ் சேரப் பதிப்பிக்கப் பெற்றதைக் காண்கின்றோம். கும்பகோணப் பதிப்பில் 96565 சுலோகங்களிருப்பதாகக் கூறுகின்றனர். இவற்றை நோக்கும்போது சுலோகங்கள் பெருகப் பெருக பாரதமும் விரிந்து, காலவரையறை கவனிக்கப்படாமல் கதைகள் வளர, கதாநாயகன் கதாநாயகி இவர்களை நிச்சயிக்க முடியாத நிலையில் தற்காலப் பாரதம் காட்சியளிக்கின்றது.

மகாபாரதம் இவ்வாறாக வளர்ந்துவருவதைத் தடுக்கவும் ஓர் உபாயம் செய்யப்பட்டதுபோல் தோன்றுகின்றது. பருவசங்கிரகம் என்றோர் முகவுரை இயற்றி அதனுள் மகாபாரதம் கூறும் பொருள்களையும், பருவங்களில் அமைந்துள்ள சுலோகங்களின் தொகைகளையும் எடுத்துக் காட்டிக் கணக்கிட்டுள்ளார்கள். இக் கணக்கின்படி பாரதத்தில் 84895 சுலோகங்களிருத்தல் வேண்டும். இப்படிக் கணக்கிட்ட பிற்பாடும் அது வளராமல் இல்லை; வளர்ந்தது.

இவ்விதம் பழைய நூல்களில் இடையே இடைச்செருகல் நுழைவது பெருவழக்காய் விட்டது. சங்கத நூல்களிலும் தமிழ் நூல்களிலும் இதன் உண்மையைக் காண்டல் கூடும். பஞ்ச காவியத்துள் ஒன்றாகிய சீவகசிந்தாமணியில் 2400 செய்யுட்கள் தாமுண்டு என்று அதனைப் பாடின திருத்தக்கதேவர் வாக்கால் அறிகின்றோம்.

> மூந்நீர் வலம்புரி சேர்ந்ததைந்து வாய்முரான்று முழங்கியீன்ற
> மெய்ந்நீர்த் திருமுத் திருபத்தேழ் கோத்தமிழ்ந்து திருவில்வீசச்
> செந்நீர்த் திரள்வடம் போற்சிந்தா மணியோதி யுணர்ந்தார்கேட்பா
> ரிந்நீ ராயுயர்வ ரேந்துபூந் தாமரையாள் காப்பாளாமே,

என்று சிந்தாமணிப் பாடல் அறிவிக்கின்றது. சிந்தாமணிக்கு உரை வகுத்த நச்சினார்க்கினியர் கூற்றும் அஃதேயாம். அச்சிடப்பெற்ற நூலில் 3145 செய்யுட்கள் உள்ளன. கணக்குக்கு அப்பாற்பட்ட 445 செய்யுட்களையும் கந்தியார்என்பார் பாடிச்சேர்த்தார் என்பர். சேக்கிழார் பாடிய பெரியபுராணத்திலும் இடைச்செருகற் பாடல்களுண்டு. பெரிய புராணம் 4259 விருத்தப்பாக்களாலாயதென்று திருத்தொண்டர்புராண சாரத்தில் உமாபதி சிவாச்சாரியாரால் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இப்போது அச்சிடப்பெற்ற பெரிய புராணத்தில் 4299 விருத்தப் பாக்களுண்டு. அஃதாவது 46 பாடல்கள் அதிகமாக விருக்கின்றன. இந்த மேலதிகப் பாடல்களை வெள்ளி பாட்டென்றும், துறைமங்கலம் சிவப் பிரகாச சுவாமிகளுக்கு ஆசிரியராம் வெள்ளியம்பலத் தம்பிரானால் பாடிச் சேர்க்கப்பட்டன வென்றும் கூறுவர். கம்பராமாயணத்தில் எத்தனையோ பாடல்கள் இடைச் செருகல்களென்றும், கம்பரின் பாடல்களில் சிலவற்றில் அடிகளையே மாற்றி யமைத்துவிட்டார்களென்றும் சிதம்பரநாத முதலியார் போன்றவர்கள் நினைக்கின்றார்கள். இப்படி நினைப்பதுடன் அடங்கி யிருத்தல் தமிழர் பண்பாட்டிற்கு மாறான தென்றும், கம்பரின் பாடல்களைத் தாமறிந்திருப்பதாகச் சாதித்தும் புதுப்பாடங்கள் வகுத்துள்ளார். இடைச் செருகல் போதாதென்று வேறும் வேறும் இடைச்செருகல்களைப் புகுத்தல் சேற்றுநீரைக் கலக்கிக் குடிப்பதை ஒக்கும். நக்குகிற நாய்க்குச் செக்கென்ன சிவலிங்கம் என்ன? என்ற பழமொழிப் பிரகாரம் தேவார திருவாசகங்களிலும் கசடர் கை வைத்துள்ளார்கள். குறளிற் கைவைத்த பாதிரியார் தியாகராசச் செட்டியார் கையிற் பட்டபாடு பெரும்பாடன்றோ?

இதுவரையும் சங்கத மொழியில் பாரதம் வளர்ந்த கதையினை அறிந்தோம். இனி, செந்தமிழ் பேசும் நந்தமிழ் நாட்டில் மகாபாரதக் கதை எவ்வாறு பரவியதென்பதை ஆராய்வாம். பாரதக் கதை கடைச் சங்கப் புலவர் காலத்தில் தமிழ் நாடெங்கணும் பரவி யிருந்தது என்பதற்குப் போதிய ஆதாரங்களுண்டு. கடைச்சங்க நூலெனக் கருதப் படும் கலித்தொகையில்,

> வயக்குறு மண்டிலம் வடமொழிப் பெயர்பெற்ற
> முகத்தவன் மக்களுள் முதியவன் புணர்ப்பினால்
> ஐவரென் றுலகேத்து மரசர்க ளகத்தராக்
> கைபுனை யரக்கில்லைக் கதழெரி சூழ்ந்தாங்கு

என்று பாரதக் கதை எடுத்துக் காட்டப் பெற்றிருக்கிறது. அஃதா வது வடமொழிப் பெயர்பெற்ற வயக்குறு மண்டிலம் போலும் முகத் தவனுடைய மக்களுள் மூத்த துரியோதனன் சூழ்ச்சியாலே, ஐவ ரென்று உலகத்தார் புகழும் தர்மபுத்திரர் முதலியோர் உள்ளேயாகக் கையாலே புனையப்பட்ட அரக்கு மாளிகையை விரைந்து நெருப்புச் சூழ்ந்தாற் போல; என்பதே என்க, இவ்வாறு பாரதக் கதை கலித் தொகையில் பலவிடங்களில் வந்துளது. இன்னுஞ் சில வைதிகக் கொள்கைகள் பாரதத்திற் கூறிய பிரகாரம் தமிழ் நூல்களிலும் சொல் லுக்குச் சொல்லாக வந்ததுமுண்டு. மகாபாரதத்தில் மூவெயிலுடற்றிய செய்தி எவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறதோ அவ்வாறு புறநானூற்றில்,

> ஓங்குமலைப் பெருவிற் பாம்புஞாண் கொளீஇ
> ஒருகணை கொண்டு மூவெயி லுடற்றிப்
> பெருவிற லமரர்க்கு வென்றி தந்த
> கறைமிடற் றண்ணல்

என்று வருகின்றது.

இஃதிவ்வாறாக மகாபாரதக் கதை பரவியிருந்த கடைச் சங்க காலத்தை அண்மி பாரதம் தமிழில் வெண்பாயாப்பில் யாக்கப்படலா யிற்று. தொண்டை நாட்டிற் பிறந்து தமிழில் மிக்க வல்லவராகிப் பாரதத்தைப் பன்னீராயிரம் தமிழ்ப்பாடலில் யாத்து அரங்கேற்றினார் பெருந்தேவனார். இதனைத் தொண்டைமண்டல சதகத்திலுள்ள பா வொன்று வலியுறுத்துகின்றது,

> சீருறும் பாடல்பன் னீராயிரமுஞ் செழுந்தமிழ்க்கு
> வீரர்தஞ் சங்கப் பலகையி லேற்றிய வித்தகனார்
> பாரதம் பாடும் பெருந்தேவர் வாழும் பெரும்பதிக்கண்
> யாருதம் பூவின் மணம்வீ சிடுந்தொண்டை மண்டலமே.

பாரதத்தைப் பெருந்தேவனார், வெண்பா அகவல் என்னும்இரு வகை யாப்பினுஞ் செய்தனர் என்பர். கடைச்சங்க கால அண்மையிற் செய்யப்பட்ட இந் நூல் இப்போது கிடைப்பதில்லை. புறத்திரட்டில் பல செய்யுட்கள் திரட்டப்பட்டிருக்கின்றன. மாதிரிக்கு ஒரு செய்யுள் தருவாம்.

பிறன்றாரம் வேட்டல் பிழைப்பிலார்ச் சீறல்
அறம்கே டனையமே சூழ்தல்—மறந்தேயுந்
தீநிலத்தாம் சொற்கேட்டல் தீச்சூ திவைகண்டாய்
மேனிலத்தார் கேட்டுக்கு வித்து.

கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் தெள்ளாற்றில் போர்வென்ற மூன்றாம் நந்திவர்ம பல்லவன் காலத்திலே பாட்டும் வசனமும் கலந்து பெருந்தேவனார் என்ற மற்றொரு புலவர் பாரதத்தில் ஓர் பகுதியை இயற்றினார். பாக்கள் பெரும்பாலும் வெண்பா, ஒரு சில ஆசிரியப்பா, இரண்டொன்று விருத்தம். இந் நூல் இக் காலத்தில் பெருந்தேவனார் வெண்பாப் பாரதம் என வழங்கிவருகின்றது. இந் நூலில் உத்தியோக பருவமுதல் துரோணபருவம் வரையும் ஏறக்குறைய 800 பாக்கள் இருக்கின்றன. மற்றப் பகுதிகள் மறைந்தவகை தெரிந்திலது.

கி. பி. 15-ம் நூற்றாண்டில் வாழ்ந்த வில்லிபுத்தூரார் முதற் பத்துப் பருவம் கொண்டதோர் தமிழ்ப் பாரதத்தை விருத்தப் பாவில் இயற்றினர். வில்லிபுத்தூரார் தம் நூலிற் கூறும் சிறப்புப்பாயிரத்தை நோக்குவோர், இந்நூலின் முதனூல் வியாச பாரதம் என்றெண்ணுவர். தற்சிறப்புப்பாயிரத்தி லிவர்

மண்ணி லாரண நிகரென வியாதனார் வகுத்த
எண்ணி லாஙெடுங் காதையை யானறிந் தியம்பல்

முன்சொ லாகிய சொல்லெலா முழுதுணர் முனிவன்
தன்சொ லாகிய மாப்பெருங் காப்பியந் தன்னைத்
தென்சொலா லுரை செய்தவில்

என்று கூறியுள்ளார்.

ஆனால் வியாசர் பாரதத்திற்கும் இந் நூலுக்கும் கதைப்போக்கில் அதிக பேதமுண்டு. வியாசர்மேலுள்ள மதிப்புக்காக வில்லிபுத்தூரார் இவ்வாறு கூறினாரன்றி உண்மையில் அவர் கதையைப் பின்பற்றி நூலை இயற்றினாரல்லர். சங்கதமொழியில் அகத்திய பண்டிதர் என்பவரால் யாக்கப்பெற்ற சுருக்கமான பாரதநூலொன்று உண்டு. அஃது இருபது சருக்கங்களைக் கொண்டது. அகத்தியபண்டிதரோ புலமையிற் சிறந்தவர்; எழுபத்து நான்கு நூல்கள் செய்துள்ளார். தெலுங்க நாட்டினைப் பரிபாலித்த 2-ம் பிரதாபருத்திரன் சபையில் வித்தியாநாதன்

என்ற பட்டம் பெற்றவர். இவர் செய்த பாதநூல் பாலபாரதம் எனப் படும். இந் நூலின் கையெழுத்துப் பிரதியையும், வில்லிபாரதத்தில் ஆதிபருவம் கதைப் போக்கினையும் ஒப்பிட்டுப்பார்த்த ஆராய்ச்சியாளர், வில்லிபுத்தூரார் சுலோகத்திற்குச் சுலோகம் சொல்லுக்குச் சொல் பால பாரதத்தைத் தழுவித் தம் நூலை அமைத்துக்கொண்டனர் என்கின்ற னர். ஆதிபருவம் முழுவதும் உண்மையில் கற்பனையும் கதையும் மூற் றாய் ஒத்திருக்கின்றன. மேலும் நாம் மேலேகூறிய நூல்வடிவத்தில் தற்போது கிடைக்கப்பெறும் பாரதவெண்பாவிலுள்ள செய்யுட்கள் உரைப்பகுதிகள் பெரும்பாலும் வில்லிபாரதத்தின் பிற்பகுதியில் எதி ரொலிபோல் ஒலிக்கின்றன. இவ்விரு நூல்களும் இவ்வளவு ஒற்றுமை யோடு விளங்குவதைப் பார்க்குமிடத்து வில்லிபுத்தூரார் தமது பாரதத் தின் பிற்பகுதியைப் பெருந்தேவனார் பாரத வெண்பாவை ஒட்டிச் செய் தனர் போலத் தெரிகின்றது.

பெருந்தேவனார் பாரத வெண்பாவின் முதற்பகுதி கிடைத்திலது. வில்லிபுத்தூரார் காலத்திலேயே அழிந்திருத்தல் கூடும். ஆகவேதான் வில்லிபாரதத்தின் முற்பகுதி அகத்திய பண்டிதரின் பாலபாரதத்தை யும் பிற்பகுதி பெருந்தேவனார் பாரதத்தில் கிடைக்காத பகுதிகளைப் பாலபாரதத்திற் பார்த்து அமைத்துக்கொண்டனர் எனக்கொள்ளுதல் தகும். ஆனால் சிறிதேனும் வியாசரைத் தழுவவில்லை யென்று சொல் லுதல் பொருந்தாது.

வில்லிபுத்தூரார் பாரதகதையைச் சுருக்கிக் கூறிப் பாண்டவர் போர் வென்று முடி சூடி இனிது வாழ்ந்தார் என்றவரையுமுள்ள கதையோடு தமது நூலை முடித்துக்கொண்டார்.

வில்லிபாரதத்தை விரிவாக அமைக்கக் கருதி 18-ம் நூற்றாண் டில் வாழ்ந்த நல்லாப்பிள்ளை என்பவர் வில்லியாரின் செய்யுட்களையும் சேர்த்துக்கொண்டு, அவர் சுருக்கியவற்றை விரித்தும் கூறாதவற்றைச் சேர்த்தும், பெரிய நூலாக ஒரு பாரதம் ஆக்கியுள்ளார். இது நல்லாப் பிள்ளை பாரதம் என வழங்குகின்றது.

வில்லியார் பாடியுள்ள பத்துப் பருவங்கள்போக எஞ்சிய எட்டுப் பருவங்களையும் 18-ம் நூற்றாண்டில் வாழ்ந்த அரங்கநாதக்கவிராயர் என் பவர் விருத்தங்களாகப் பாடியுள்ளார். இந் நூல்களைத் தவிர, சென்னைக்

கையெழுத்துப் புத்தகசாலையில் மாவிந்தம் என்ற ஒரு பாரத நூல் இருக்கிறது. இதுவும் விருத்தங்களாலானது. ஆனால் நடைப்போக்கு நன்றாயில்லை.

காஞ்சிப்புராணம் செய்தார் மூவர். சிவஞான முனிவருஞ் செய்தார். கச்சியப்ப முனிவருஞ் செய்தார். இவர்கள் காலத்திற்கு முன் தமிழில் ஒரு காஞ்சிப்புராணமுண்டு. அதனை இயற்றியவர் யாரெனத் தெரியவில்லை. இதனை இயற்றிய புலவர் ஒரு பாரத நூலும் செய்துள்ளாரென்று அப் பழைய காஞ்சிப்புராணச் சிறப்புச் செய்யுளால் தெரிய வருகிறது. அந்தப் பாரத நூலும் கிடைக்கப் பெற்றிலேம்.

இவையெல்லாம் செய்யுள் நூல்கள். வசன நூல்களும் காலத்துக் குக் காலம் தோன்றின. பெரிய பாரத வசனம் ஒன்று பல பாகங்களாக இருக்கிறது. பாரதச் சுருக்கம் என்ற நூல் மூத்துத்தம்பிப் பிள்ளை யால் எழுதப்பெற்றுளது. வியாசர்விருந்து என்று பாரதகதையை அழகாகப் புனைந்துள்ளார் இராசகோபாலாச்சாரியார்.

திருமால் வணக்கம் என்பதனைப் பரப்பும் நோக்கமாக எழுந்ததே பாரதம் எனலாம். இதனை வில்லிபுத்தூரா சிறுகச்சொல்லிப் பெருக விளக்கவைத்துள்ளார்.

> மன்னு மாதவன் சரிதமும் இடையிடை வழங்கும்
> என்னு மாசையால் யானுமீ தியம்புதற் கிசைந்தேன்.

காலவரையறை:

1 மகாபாரதத்தில்வரும் சில கதைகள் சுலோகங்கள் வேதகாலத் தைச் சார்ந்தவைகளாகலாம்.

2 பாரதம் என்றோர் நூல் வேதகாலத்தில் இருக்கவில்லை.

3 கி. மு. 4-ம் நூற்றாண்டிற்குமுன் மகாபாரதம் என்ற நூல் இருந்ததென்பதற்குச் சான்றுகளில்லை.

4 கி. மு. 4-ம் நூற்றாண்டிற்கும் கி. பி. 4-ம் நூற்றாண்டிற்கும் இடையே மகாபாரதம் சிறிது சிறிதாக வளர்ந்து தற்கால நிலைமைக்கு வளர்ந்துவிட்டது.

5 கி. பி. 5-ம் நூற்றாண்டில் மகாபாரதம் புண்ணிய நூலாகவும் சமயப்பிரசாரத்திற்குரிய நூலாகவும் அமைந்துவிட்டது.

6 கம்போடியாவில் கி. பி. 600 அளவில் பொறிக்கப்பட்ட ஒரு சாசனத்தால் இந்திய தேசத்திலிருந்து வந்த பாரதச்சுவடிகளை வைத்துக்கொண்டு பிரசங்கவாசிப்பு நிகழ்ந்ததாகத் தெரிகின்றது.

7 கி. பி. 5-ம், 6-ம் நூற்றாண்டில் பாரதத்தில் வரும் தானதருமப் பகுதிகளை வாசிப்பதற்கு மானியம் விட்டதாகப் பலசாசனங்கள் தெரிவிக்கின்றன. இவற்றுள் ஒன்று பாரதம் நூறாயிரம் சுலோகங்கள் கொண்டதெனக் கூறுகிறது.

8 தமிழ்நாட்டில் கடைச்சங்ககாலத்திற்கு முன்பே பாரதகதை பரவியிருந்தது.

9 சங்கமருவிய காலத்தில் பெருந்தேவனார் என்பவரால் பாரத வெண்பா இயற்றப்படலாயிற்று.

10 கி. பி. 9-ம் நூற்றாண்டில் பெருந்தேவனார் என்ற மற்றொரு புலவர் பாரதத்தில் ஒரு பகுதியைச் செய்யுளில் யாத்துள்ளார்.

11 கி. பி. 15-ம் நூற்றாண்டில் வில்லிபுத்தூரரால் பாரதம் விருத்தப்பாவில் இயற்றப்பெற்றது.

12 கி. பி. 18-ம் நூற்றாண்டில் நல்லாப்பிள்ளை பாரதம் யாக்கப்பட்டது. இதே நூற்றாண்டில் வாழ்ந்த அரங்கநாதக்கவிராயர் நல்லாப்பிள்ளை பாரதத்தைத் தொடர்ந்து முடித்துவிட்டனர்.

# கீழ் நீர் (Water Springs)

வித்துவான், திரு. கு. குமாரஸ்வாமி ஆச்சாரிஅவர்கள், M.A. விரிவுரையாளர்,
தமிழ்க்கல்லூரி, மயிலம்.

(162-ம் பக்கத் தொடர்ச்சி.)

மூங்கிலின் வடக்கே பாம்புவளை இருந்தால் அதன் தெற்கே பத்து ஆள் ஆழத்தில் நன்னீரோட்டமுண்டு. ஆங்குக் கிணறுதோண்டுகையில் ஒரு ஆள் ஆழத்தில் மஞ்சள்நிறத் தவளை காணப்படும்.

அரசமரத்தின் (ரோஹிதக மரம்) மேற்கே பாம்புவளை இருந்தால் அவ் வளையின் தெற்கே மூன்றுமுழ தூரத்தில் பன்னிரண்டாள் ஆழத்தில் நீரோட்டமுண்டு. அது மேற்குமுகமாக ஓடும்.

இந்திர தருவின் (செம்புளிச்சை மரம்) கிழக்கே எறும்புப் புற்றிருந்தால் அப் புற்றின் மேற்கே ஒரு முழ தூரத்தில் பதினுன்காள் ஆழத்தில் நீரோட்டமுண்டு. ஆங்குக் கிணறு தோண்டுகையில் ஒரு ஆள் ஆழத்தில் கபில நிறமுடைய பல்லி (Iguana) காணப்படும்.

நாககேசர மரத்தின் வடக்கே பாம்புவளை யிருந்தால், அவ் வளையின் தெற்கே இரண்டு முழ தூரத்தில் பதினைந்தாள் ஆழத்தில் நீரோட்டமுண்டு. நீர் உப்பாயிருக்கும். ஆங்குக் கிணறு தோண்டுகையில் அரையாள் ஆழத்தில் கீரியுண்டு. அதனடியில் செம்பின் நிறத்தையுடைய பாறை காணப்படும். அதனடியில் செம்மண் உண்டு. அதனடியில் நீரோட்டம் தெற்கு முகமாக ஓடும்.

இலந்தை மரங்களும் அரச மரங்களும் ஓரிடத்தே ஒருங்கே வளர்ந்திருக்க, அருகில் எறும்புப்புற்று இல்லாதிருந்தாலும் அம் மரங்களுக்கு மேற்கே மூன்று முழ தூரத்தில் பதினுறுள் ஆழத்தில் நீரோட்டமுண்டு. ஆங்குக் கிணறு தோண்டுகையில், ஒரு ஆள் ஆழத்தில் தேள் இருக்கும். அதனடியில் வெள்ளை மண் காணப்படும். அதனடியில் மாவு நண்டைபை பொத்த கல் காணப்படும். அதனடியில் தெற்கு முகமாக நன்னீரோடுகிறது. அந் நீரோட்டத்தின் வடக்கே மற்றொரு நீரோட்டமுண்டு. பீலு மரமும் இலந்தை மரமும் ஒருங்கு வளர்ந்திருந்தால், அம் மரங்களுக்குக் கிழக்கே மூன்று முழ தூரத்தில் இருபதாள் ஆழத்தில் என்றும் வற்றாத உப்பு நீருண்டு.

செம்புளிச்சை மரம், மூங்கில் அல்லது வில்வமரங்களுடன் ஒருங்கு வளர்ந்திருந்தால் அம்மரங்களுக்கு மேற்கே இரண்டு முழ தூரத்தில் இருபத்தைந்தாள் ஆழத்தில் நீரோட்டமுண்டு.

இலந்தை மரமும் மூங்கிலும் ஒருங்கு வளர்ந்திருந்தால் அம் மரங்களுக்கு மேற்கே மூன்று முழ தூரத்தில் பதினெட்டாள் ஆழத்தில் நீரோட்டமுண்டு. அது வடக்குமுகமாக ஓடும்.

எறும்புப் புற்றின்மேல் அறுகம்புல்லாவது தருப்பையாவது வளர்ந்திருந்தால், அங்கே இருபத்தோராளாழத்தில் நீரோட்டமுண்டு. எறும்புப்புற்றின் மேல் அறுகம்புல் அதிகமாக வளர்ந்திருந்தாலும், கடப்பமரம் நன்கு வளர்திருந்தாலும் அதன் மேற்கே மூன்றுமுழ தூரத்தில் இருபத்தைந்தாள் ஆழத்தில் நீரோட்டமுண்டு. மூன்று எறும்புப் புற்றிற் கிடையில், அரசமரம் வேறு மூன்று மரங்களோடு வளர்ந்திருந்தால் அங்கு நீரோட்டமுண்டு. ஆங்குத் தோண்டுகையில் நான்கு முழ தூரத்தில் நாற்பதாள் ஆழத்தில் நடுப்பகுதிக்கு வடக்கே பதினறு அங்குல அளவில் ஒரு பாறை காணப்படும்.

வன்னிமரம் முடிச்சுகளோடு விளங்க அதன் வடக்கே எறும்புப் புற்றிருந்தால், அப் புற்றின் மேற்கே ஐந்து முழ தூரத்தில் ஐம்பதாள் ஆழத்தில் நீரோட்டமுண்டு. ஓரிடத்தில் பல எறும்புப் புற்றிருக்க இடையிலுள்ளது ஒன்று வெண்மையா யிருந்தால் அங்கே ஐம்பத்தைந்தாள் ஆழத்தில் நீரோட்டமுண்டு.

முருக்கமரம் வன்னிமரங்களோடு ஒருங்கு வளர்திருந்தால், அம் மரங்களுக்கு மேற்கே அறுபதாள் ஆழத்தில் நீரோட்டமுண்டு. ஆங்குக் கிணறு தோண்டுகையில், அரையாள் ஆழத்தில் ஒரு பாம்பு காணப்படும். அதனடியில் மஞ்சள் நிறமான மண் மணலோடு காணப்படும்.

வெண்மையான அரசமரத்தைச் சுற்றிலும் எறும்புப் புற்றுக்கள் காணப்பட்டால், அம மரத்திற்கு மேற்கே ஒருமுழ தூரத்தில் எழுபது ஆள் ஆழத்தில் நீரோட்டமுண்டு. வன்னிமரம் வெண்மையாகவும் முட்களோடும் காணப்பட்டால் அம்மரத்தின் தெற்கே எழுபத்தைந்து ஆள் ஆழத்தில் நீரோட்டமுண்டு. ஆங்குத் தோண்டுகையில் அரையாள் ஆழத்தில் ஒரு பாம்பு காணப்படும்.

வன்னிலத்திற்குக் கூறியவற்றை வறண்ட நிலத்தில் வளமுள்ள பகுதிக்குப் பயன் படுத்தக்கூடாது. வன்னிலத்தில் நாவல் வஞ்சிமரங்களிருக்கு மிடத்தில் கூறிய ஆழத்தின் அளவை இருமடங்காக்கிக் கொள்க.

நாவல், த்ரிவ்ருதம் (Trivrita?) பெருங்தரும்பை, சிசுமரி (Sisumari), கன்னரி, அருநெல்லி, கருஞ்சிவதை, வீருதி (Veerudhi) பன்னிமெட்டம்தகரை (Varahi), வாலுளுவை, கருடவாகை, சுகரிகம் (Sukarika), நரிமுருங்கை (Vyagrapada) இவை பாம்புவளைகளின் அருகில் வளர்ந்திருந்தால் அவ் வளைகளுக்கு வடக்கே மூன்று முழ தூரத்தில் மூன்றரை ஆள் ஆழத்தில் நீரோட்டமுண்டு. இது நீரோட்டமுள்ள நிலங்களுக்குத்தான் பொருந்தும். இம் மரங்கள் வறண்ட நிலமாயினும் வளமுடைய நிலத்தில் (Fertile lands) இருந்தால் ஐந்தாள் ஆழத்தில் நீரோட்டமுண்டு. வன்னிலமாயின் ஏழு ஆள் ஆழத்தில் நீரோட்டமுண்டு.

மரஞ் செடிகொடிகள் இல்லாதிருப்பினும், எறும்புப் புற்றுகள் காணப்படாவிடினும் பார்வைக்கு நல்ல தோற்றம் அமையுமாயின் அந் நிலத்தே நீரோட்டமுண்டு. நிலம் பள்ளமாகவோ, மணலாகவோ, நீருடையதாகவோ, காணப்படுமாயினும், நடக்கும்போது தரையில் ஒலி கேட்பினும், நான்கரை அல்லது ஐந்தாள் ஆழத்தில் நீரோட்டமுண்டு. நல்ல வளமுடைய மரங்கள் காணப்படுமாயின் மரங்களின் தெற்கே நான்காள் ஆழத்தில் நீரோட்டமுண்டு. மரங்கள் நிறைந்திருக்குமாயினும் நிலம் அமைதியான தோற்றமுடையதாயிருப்பின் மேற்சொன்னவாறே துணியப்படும்.

நன்செய் நிலமாயினும் வளமுடைய புன்செய் நிலமாயினும் நாம் காலை ஊன்றும்போது தரை அழுந்துமாயின் ஒன்றரை ஆள் ஆழத்தில் நீரோட்டமுண்டு. வீடுகள் அருகில் இல்லாதிருக்கவும் புழுக்கள் மிகுதியாகக் காணப்படின் அவ்விடத்தில் நீரோட்டமுண்டு. தரை சூடாகவோ குளிர்ச்சியாகவோ இருக்குமானால் மூன்றரையாள் ஆழத்தில் சூடான அல்லது குளிர்ச்சியான நீரோட்டமுண்டு. எறும்புப் புற்றாவது மீனுவது அவ்விடத்தில் காணப்படுமாயின் அதற்கு நான்கு முழ தூரத்தில் மூன்றரை ஆள் ஆழத்தில் நீரோட்டமுண்டு. பல புற்றுக்கள் உள்ள இடத்தில் ஒன்று மாத்திரம் மற்றவைகளைவிட உயரமாகக் காணப்படின் அவ்விடத்தில் நீரோட்டமுண்டு. பயிர் விளையாது அழிந்துபோகும் இடங்களிலும் நீரோட்டமுண்டு.

ஆலமரம், முருக்கமரம் (பலாச), அத்தி மரம் ஆகிய இவைகள் ஓரிடத்தே ஒருங்கே வளர்ந்திருப்பின் அங்கே நீரோட்டமுண்டு.

ஆலமரமும் பிப்பல (அரசு) மாமும் ஒருங்கு வளர்ந்திருந்தால் அம் மரங்களின் வடக்கே நீரோட்டமுண்டு.

ஓர் ஊருக்குத் தென்கிழக்கே கிணறு இருந்தால் பலவிதமான அச்சங்களால் துன்பமுண்டு. அவ்வூர் நீர்வேட்கையினாலும் வருந்தும். தென்மேற்கு மூலையில் இருந்தால் குழந்தைகள் அழிவர். வடமேற்கிலாயின் மகளிர் வருந்துவர் வடகிழக்காயின் செல்வவளமுண்டாம்.

இதுவரை சொல்லப்பட்டன சாரஸ்வதமுனிவர் கொள்கைகளாம். இனி இக் கீழ்நீர் பற்றிய மனுவின் கொள்கைகளைக் காண்பாம்.

மரஞ்செடிகொடிகள், ஒளியொடு கூடிய நல்லஇலைகளோடு செழித்து வளர்ந்திருக்குமாயின், அவ்விடத்தில் நீரோட்டமுண்டு. பத்மம் (Padma), நீசிஞ்சி (Kshura), வெட்டிவேர், கருங்காலிவகை (Kula) வெளாங்கழி (கொறுக்கை, நாணல், தருப்பை ஆகியவைகள் வளர்ந்துள்ள இடங்களில் நீரோட்டமுண்டு.

பேரீந்து, நாவல், மருதம், வஞ்சி ஆகிய மரங்கள் வளர்ந்திருக்குமிடங்களிலும், பாலுடைய மரங்கள் வளர்ந்துள்ள இடங்களிலும், புதர்களும் கொடிகளும் வளர்ந்துள்ள இடங்களிலும், சதகுப்பி, ஆனைத்திப்பிலி, கபிலப்பொடி, ஏழிலைப்பாலை, கடம்பு, வெண்ணொச்சி, புங்கமரம் ஆகியஇவைகள் வளர்ந்துள்ள இடங்களிலும் நீரோட்டமுண்டு தான்றி மரம் உள்ள இடத்தில் மூன்றாள் ஆழத்தில் நீரோட்டமுண்டு. ஒன்றன்மேல் ஒன்றாகக் கற்கள் அடுக்கியிருந்தால் அவற்றின் அடியில் மூன்றாள் ஆழத்தில் நீரோட்டமுண்டு.

மேடான நிலங்களில் தருப்பைப்புல்லோடும், நாணலோடும் மஞ்சம் புல் வளர்ந்திருந்தாலும் சிறுசிறு பாறகற்களோடு கூடிய கருமண் நிலமாயிருந்தாலும், தரை (மண்) கருப்பாகவாவது சிவப்பாகவாவது இருந்தாலும் அவ்விடங்களில் பெரு நீரோட்டமுண்டு. நீர் இனிப்பாயிருக்கும். செம்மண் பாறகற்களோடு கூடியிருந்தால், நீர் மணமுடையதாக விருக்கும். மண் கபில நிறமாக (Brown) இருந்தால் உவர் நீராக இருக்கும். மண் வெண்மையாக விருந்தால் உப்பு நீராகவிருக்கும். மண் கருப்பாகவிருந்தால் இனிப்பாகவிருக்கும்.

வாகை, மரா, மருதம், வில்வம், ஆச்சா, பெருங்குமிழ், வேம்பு, வெள்வேல், அசோகு ஆகிய மரங்கள் வளர்ந்திருக்குமிடங்களிலும், மரம் செடிகொடிகளின் இலைகள், துளைகள் நிறையப்பெற்று இருக்கு

மிடங்களிலும், அம்பரளு செடிகொடிகள் பார்வைக்கு அழகாயிராத இடங்களிலும் நீரோட்டமில்லை.

நிலம் (தரை) சூரியன், நெருப்பு, சாம்பர், ஒட்டகம், கழுதை ஆகியவற்றின் நிறத்தொடு காணப்படின் அவ்விடத்தில் நீரோட்டம் இல்லை. மூங்கில் புஷ்பம் சிவப்பாகக் காணப்படினும், தரை சிவந்த நிறத்தோடிருப்பினும் நீரோட்டமுண்டு. நீர், பாறையின் அடியில் காணப்படும். வைடூரியத்தைப் போலவும், மேகத்தைப் போலவும், பழுக்கும் பருவத்திலுள்ள அத்திக்காயின் நிறம்போலவும், கபில நிறமாகவும் உள்ள கற்கள் நிறைந்துள்ள இடங்களின் அண்மையில் நீரோட்டமுண்டு. புறு, தேள், நெய், வெண்பட்டு, சோமக்கொடி போன்ற நிறமுடைய கற்கள் நிறைந்துள்ள இடங்களின் அண்மையிலும் வளமிக்க நீரோட்டமுண்டு. கற்கள் சிவப்பாகவும், பலநிறப் புள்ளிகளையுடையதாகவும், வெள்ளைச் சாம்பர், ஒட்டகம், கழுதை ஆகியவற்றின் நிறத்தோடும், சூரியன், நெருப்புப் போன்ற நிறத்தோடும் காணப்படின் அவ்விடத்தில் நீரோட்டமில்லை. சந்திரவொளி, உதயசூரியன், முத்து, பொன், தாளகம் ஆகியவற்றின் நிறம்போன்ற கற்கள் காணப்படின் அவ்விடம் வளமுடையதாக விளங்கும். இதுவரை மநுவின் கொள்கைகள் கூறப்பட்டன.

உடைக்க முடியாத கற்கள் நிறைந்துள்ள விடங்களில் எப்பொழுதும் இயக்கர்களும் நாகர்களும் வாசம் செய்வர். அத்தகைய கற்கள் நிறைந்துள்ள நாடு பஞ்சத்தால் வாடாது. உடைக்கமுடியாத கற்களை உடைக்கும் முறை பின்வருமாறு:—(1) திண்டுக (கிலுகிலுப்பை) மரத்தின் விறகையும் உலர்ந்த இலைகளையும் கொண்டு சூடாக்கினபிறகு அக்கல்லைச் சுண்ணாம்பு நீரில் நனைத்தால் கல் உடைபடும். (2) காட்டுப் பருத்திச் செடியின் சாம்பலை, நீரிற் கலந்து சூடாக்கி, நாணற்சாற்றினைக் கலந்து அக் கலப்பில் ஏழுமுறை கல்லை நனைத்தால் அக் கல் உடைபடும். (௩) மோர், வடிநீர் (கஞ்சித் தண்ணீர்) சாராயம் ஆகிய இம் மூன்றையும் ஒன்றாகலந்து, அதனோடு, இலந்தம்பழமும் கொள்ளும் கலந்து ஏழுநாட்களுக்கு ஊறவைக்கவும்; பிறகு அதனால் கல்லை நனைத்து, பின்னர் சூடாக்கவும் கல் உடைபடும். (4) வேப்பிலை, எள், நாயுருவி, திண்டுகம், சீந்திற்கொடி இவைகளைக் கோமூத்திரத்தில் ஊறவைத்து எடுத்துக் கஷாயத்தில் கல்லை ஆறுமுறை நனைக்கவும்; பின்னர் சூடாக்கவும்; கல் உடைபடும். (5) வாழைச்சாற்றையும் மோரை

யும் கலந்து, ஒரு நாள் வைத்திருந்து பின், அக் கலப்பில் உளியை வடிக்கவும். பின்னர் அதனைச் சாணைக்கல்லில் தீட்டவும். அவ்வுளி, கல்லிலோ உலோகப் பொருளிலோ வேலை செய்யும்பொழுது முறியாது. (6) உளியில் எள்ளெண்ணெய் பூசி, பின்னர், வெள்ளாட்டின் கொம்புத் தூளும் புறாவின் மலமும் சுண்டெலியின் மலமும் எருக்கம் பாலும் கலந்த கலப்பில் அவ்வுளியைத் தோய்த் தெடுப்பின் (வடிப்பின்) அது கல்லில் வேலை செய்யும்போது முறியாது.

மலையின் அடிவாரத்தில் கரைபோல உயர்ந்துள்ள மேட்டுப்பகுதியின் அடியில் பெருநீரோட்டமுண்டு. அக்கரை கிழக்கு மேற்காக நீண்டிருப்பின் நீருண்டு. தெற்கு வடக்காக நீண்டிருப்பின் நீரில்லை. நீரோட்டமுள்ள விடங்களில் அக் கரை உடைபடுதலு முண்டு. நீரோட்டமில்லாதவிடங்களில் இத்தகைய இடங்களிலிருந்து தண்ணீர் கொண்டுவந்து பயன் படுத்தலாம்.

நீர்நிலைகளின் கரையில் செம்புளிச்சை, ஆல், மா, கல்லொளி, கடம்பு, நீர்க்கடம்பு, நாவல், வஞ்சி, மருதோன்றி, பனை, அசோகு, இருப்பை, மகிழ் ஆகிய மரங்கள் வளர்ந்திருக்கலாம். நீர் நிலைகளில் நீரை வெளிப்போக்குவதற்காக மதகு (Sluice) கற்களால் அமைக்கலாம். அம் மதகினைக் கற்களினிடையில் பலகை கொண்டு மூடும்படி அமைக்க வேண்டும். அவ்வாறு மூடினபிறகு அதனை மண்ணால் மூட வேண்டும்.

மருது, முத்தக்காசு, வெட்டிவேர் ஆகிய மணமுள்ளவற்றையும் நெல்லித் தூளையும் (Raja Kosatata powder) தேற்றாங்கொட்டையையும் நீரில் சொரிந்தால், கிணற்று நீர் மண் கலந்திருப்பினும், கசப்பாயிருப்பினும், மணமற்றிருப்பினும், தீ நாற்ற முடையதாயிருப்பினும் இனிமையும் மணமும் பொருந்திய நன்னீராக மாறிவிடும்.

மகம், அனுஷம், பூசம், அவிட்டம், உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, ரோகணி, சதையம், ஆகிய நக்ஷத்திரங்களில் சந்திரன் இருக்கும்போது கிணறுதோண்ட நன்று. கிணறு தோண்டத் தொடங்குகையில் அவ்விடத்து வருண பூஜை செய்தல் வேண்டும். பிறகு அக் குறிப்பிட்ட இடத்தில் ஆல், அல்லது வஞ்சிமுளையினை நாட்டவேண்டும்.

---